Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 331

திங்கட்கிழமை 23 ஒக்ரோபர் 2023

ஐப்பசி 06 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# தேர்தல்கள் தொடர்பில் இவ்வாரமே இறுதி முடிவு

## ஆளும்கட்சிக் கூட்டத்தை நடத்தவுள்ள ஜனாதிபதி

**கொழும்பு, ஒக்ரோபர் 23**

தேர்தல்கள் தொடர்பில் நாளுக்குநாள் விவாதங்களும், எதிர்பார்ப்புகளும் தீவிரமாகி வரும் நிலையில் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதற்காக இந்தவாரத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி ரணில் தீர்மானித்துள்ளார் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

»11



## அனைவருக்கும் சமவுரிமையாம்!

### மன்னாரில் வைத்து ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 23

அனைத்து மதத்தினரையும் சமமாக நடத்துவதும், ஒவ்வொரு குடிமகனுக்கும் சம உரிமை வழங்குவதும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாகும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். மன்னார், முசலி தேசியப் பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற

»11

## 'ஸ்மார்ட்' புரட்சிக்கு அஞ்சுகிறது அரசு!

### சம்பிக்க சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஒக். 23

ஆயுதப் போராட்டத்தால் செய்ய முடியாமற்போன விடயங்களை இன்றைய இளைஞர்கள் 'ஸ்மார்ட்' போன் ஊடாகச் செய்துகாட்டுகின்றனர். இதற்கு அஞ்சியே சமூக

»11

## காஸாவின் பேரவலம் தீர்க்கப்படவேண்டும்

### முஸ்லிம் விழாவில் ரணில் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 23

காஸாவில் அப்பாவிப் பொதுமக்களுக்கு ஏற்படும் அநீதியை கருத்தில்கொள்ளாமல் இருக்கமுடியாது. இந்தப் பேரவல நிலைக்கு உடன் தீர்வு காணப்படவேண்டும். உணவு, தண்ணீர் என்பன உரிய முறையில் அனுப்

»11

## 120 லீற். கசிப்புடன் நபரொருவர் கைது!

### பெருந்தொகை கோடாவும் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலிட்டி வடக்குப் பகுதியில் 120 லீற்றர் கசிப்புடனும், 800 லீற்றர் கோடாவுடனும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

»11

## காற்றழுத்தத்தால் கடற்கொந்தளிப்பு

### மீனவர்களே அவதானம்

கொழும்பு, ஒக். 23

வளிமண்டலவியல் திணைக்களத்தின் இயற்கை அனர்த்தங்களுக்கான ஆரம்ப எச்சரிக்கை மத்திய நிலையத்தால், பலத்த காற்று மற்றும் கடல் சீற்றம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு மற்றும் அதனை அண்டிய

»11

கிளிநொச்சியில்

## புலிகளின் புதையல் அகழ்வில் ஏமாற்றம்

கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சி, திருநகர்ப் பகுதியில் தனியார் காணியொன்றில் புதையல் இருப்பதாகத் தெரிவித்து அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், எந்தத் தடயப்பொருள்களும் மீட்கப்படாமல் அகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டன.

»11

## விபத்தில் ஒருவர் இறப்பு

முல்லை., ஒக். 23

முல்லைத்தீவு - செல்வபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

»11

வரவு - செலவுத்திட்டத்தில்

## அரச அலுவலர்களுக்கு ஊதியம் உயர்த்தப்படும்

### இராஜாங்க அமைச்சர் நம்பிக்கை



கொழும்பு, ஒக். 23

வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- 2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு -

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியிடத்துக்கு உறிஞ்சப்படும் நீர் எதிர்காலத்தில் பெரும் பாதிப்பு

## தடுக்குமாறு கைதடிமத்தி மக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஒக். 23**

**கைதடி மத்தியிலுள்ள இரண்டு கிணறுகளிலிருந்து பிறதேவைகளுக்காக நீர் எடுத்துச் செல்வதால் எதிர்காலத்தில் கைதடிப் பகுதியில் நீரற்றுப் போகும் அபாயம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை உரிய தரப்பினர் நடவடிக்கை எடுத்து தடுக்கவேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

அவர்கள் மேலும் கூறுகையில்;

கைதடி உதயசூரியன் சனசமூக நிலையத்துக்கருகிலுள்ள கிணறொன்றிலிருந்து இலங்கை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மற்றும் நீர் வழங்கல் திணைக்களம் ஆகியவை குடிதண்ணீர்த் தேவைக்காக நிலத்தடிக் குழாய் மூலம் நீரை எடுத்துச்செல்கின்றன.

அதேவேளை இங்குள்ள மற்றொரு கிணறொன்றிலிருந்து தனியார் நிறுவனம் ஒன்று எந்தவித அனுமதியுமின்றி நெடுங்காலமாக நீரை எடுத்து வெளியிடத்துக்குக் கொண்டு செல்கின்றது. இதன்போது 26 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான நீர் நாளொன்றுக்கு உறிஞ்சப்படுகிறது. இதனால் எமது பகுதியில் நீர் வற்றி நிலத்தடி நீர் அற்றுப்போகும் அபாயம் ஏற்படவாய்ப்புள்ளது.

இதுதொடர்பில் உரிய திணைக்களங்களுக்கு அறிவித்தபோதும் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றனர். (ச-159)

## இசை நிகழ்வின் ஆரம்பத்தில் படுகொலைக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 23

முற்றவெளி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இந்திய இராணுவத்தால் கொல்லப்பட்டவர்களுக்கு மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

'இம்மண்ணும் இம்மண்ணில் வாழும் மக்களும் கண்ட துயர்கள் அநேகம். ஒரு வருடத்தின் 365 நாள்களில் எந்த திகதியையும் எடுத்து வரலாற்று ஏடுகளைப் பின்னோக்கிப் புரட்டினாலும் அந்தத் திகதியில் ஒரு கொடூரச் சம்பவம் ஒரு துயர்மிகு சம்பவம் நிகழ்ந்திருக்கும்.

ஏன், இன்றும் இந்தத்திகதியில் சரியாக 36 வருடங்களுக்கு முன் யாழ். மருத்துவமனையில் நடந்த கொடூரமான நிகழ்வை நாம் துயருடன் நினைவுகூர்ந்து கொண்டிருக்கிறோம். பலதசாப்தங்களாக நடந்த கொடிய போரில் மறைந்த எம் நாட்டு மக்களுக்காக, இயலுமானவர்கள் எல்லோரும் எழுந்து ஒருநிமிட மௌனஅஞ்சலி செலுத்துமாறு வேண்டுகிறோம்' என தமிழிலும் ஆங்கிலத்திலும் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அனைவரும் எழுந்து ஒரு நிமிட மௌன அஞ்சலியை உயிரிழந்தவர்களுக்குச் செலுத்தினர். (அ-ஒ,125)

## துப்பாக்கிச்சூட்டில் குடும்பம் படுகாயம்

கொழும்பு, ஒக்.23

அஹுங்கல்ல - உரகஹ வீதியின் கல்வெஹர பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் தாய், தந்தை மற்றும் நான்கு மாதக் குழந்தை ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த மூவரும் பலப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களது நிலைமை மோசமாகவுள்ளது என்றும், அவர்களைக் கராப்பிட்டிய மருத்துவமனைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அஹுங்கல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான மூவரும் அஹுங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாவர்.

தென்னிலங்கையில் பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவரின் நெருங்கிய உறவினரின் குடும்பம் மீதே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் தரப்புகள் தெரிவிக்கின்றன. (எ-இ)

### ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்

## தெரிவுக்குழு விசாரணைகளில் சுயாதீனம் பின்பற்றவேண்டும்

### எதிர்க்கட்சி நிபந்தனை விதிப்பு

கொழும்பு, ஒக். 23

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் 'சனல்-4' காணொலி வெளியிட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்படவுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு சுயாதீனமாக அமைவதற்கு நிபந்தனைகளை விதித்துள்ளது எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில்கூடியது. இதன்போது உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் 'சனல்-4' ஒளிபரப்பிய காணொலியில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமித்தல் யோசனையை ஆளுங்கட்சி உறுப்பினர் மேஜர் பிரதீப் உந்துகொட முன்வைத்தார்.

இந்தநிலையில் இந்தத் தெரிவுக்குழு யோசனை தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் நம்பிக்கை இல்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஏற்புடையதாக அமையவேண்டுமெனில், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சர்வதேச சுயாதீன விசாரணைக் குழுவின் மேற்பார்வையில் இடம்பெறவேண்டும்.

இந்த விசாரணைக் குழுவுக்காக நியமிக்கப்படும் உள்நாட்டு உறுப்பினர்களில், பல்வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள சி.ஐ.டி. அதிகாரிகளை உள்ளீர்க்கவேண்டும்.

குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய அதிகாரிகள், விசாரணை நடத்தப்படும்வரை இடைநிறுத்தப்படவேண்டும். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவரைப் பெயரிடுவதற்கான பொறுப்பு பிரதான எதிர்க்கட்சியான எமக்கு வழங்கப்படவேண்டும். அமெரிக்காவில் நடத்தப்பட்ட 9/11 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் சமமாக ஆளும், எதிரணி உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். அதேபோன்ற கட்டமைப்பில் இந்தத் தெரிவுக் குழு அமையவேண்டும், அவ்வாறு இல்லாவிட்டால் தெரிவுக்குழுவில் எம்மால் இணையமுடியாது- என்றார். (ச-44)



## இ.போ.ச. பேருந்து மீது நேற்றுமுன்தினம் தாக்கு

வவுனியா. ஒக். 23

இ.போ.ச. வவுனியா சாலைக்குரிய பேருந்து மீது இனந்தெரியாதவர்களால் தாக்குதல் முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேருந்தானது பராக்கிரமபுரவிலிருந்து வவுனியா நகரை நோக்கி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வரும்போது நகர மத்தியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதன்போது நகர மத்தியிலே நின்ற சிலர் அந்த வழியே வந்த பேருந்து மீது போத்தலை வீசி தாக்கிவிட்டு காரில் ஏறித் தப்பிச்சென்றுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பேருந்தின் கண்ணாடி உடைந்ததுடன், பயணி ஒருவரும் காயமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.110,18)

## இஸ்ரேல் விவசாயத்துறையில் இலங்கையருக்கு வாய்ப்புகள்!

கொழும்பு, ஒக். 23

இஸ்ரேல் விவசாயத்துறையில் ஆயிரக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அந்த நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைமையை மதிப்பிட்டதன் பின்னர், அந்த வேலைவாய்ப்புகளுக்கு இலங்கை பணியாளர்களைப் பணியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இஸ்ரேலுக்கு வேலைக்குச் செல்ல தயாராகவுள்ளவர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில் அனுப்பத் தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## ஸ்கந்தபுரம் ஏற்றுநீர்ப்பாசனத்திட்டம் சூரியமின்கலம் மூலம் செயற்படும்

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் சூரிய மின்கலத்தின் மூலம் செயற்படும் நடவடிக்கை அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசன கமக்காரர் அமைப்பின் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார். திட்டத்துக்கான நிதியை நெதர்லாந்து சிக்கன கடனுதவி கூட்டுறவு அமைப்பு ஏற்று நீர்ப்பாசன அமைப்புக்கு வழங்கியிருந்தது. 38.3 மில்லியன் ரூபா செலவாகியிருந்தது. அக்கராயன் குளத்திலிருந்து நீர் ஏற்று நீர்ப்பாசனமாக ஸ்கந்தபுரம் பகுதிக்குச் செல்கிறது. 183 விவசாயிகள் பயனடையவுள்ளனர். இதன் மூலம் உப உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியும். 2010ஆம் ஆண்டு குறித்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோதும் எரிபொருள் மூலம் இயந்திரம் இயங்கியது. இது விவசாயிகளுக்கு மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தியதால் திட்டம் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலத்தமடு விவகாரத்தில் ரணில் ஒருதலைப்பட்சமாம்

## கிழக்கு முன்னாள் ஆளுநர் கூறுகின்றார்

**கொழும்பு, ஒக்.23**

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாகச் செயற்படுகிறார். சிங்களவர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு ஒரு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. திம்புலாகல பகுதியிலுள்ள சிங்களவர்களை வெளியேற்ற ஒருபோதும் இடமளிக்கமுடியாது - இவ்வாறு கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை விவகாரத்தை முன்னிலைப்படுத்தி மட்டக்களப்பு. திம்புலாகல சிங்கள கிராமத்தில் வாழும் சிங்கள மக்கள் வெளியேறவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

மயிலத்தமடுப் பண்ணை மேய்ப்பாளர்களின் பிரச்சினைகளுக்கு மாற்றுத்திட்டங்களைச் செயற்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சிங்களவர்கள் அந்தப் பகுதியில் இருக்கக்கூடாது என்ற நோக்கத்தில் இருந்துகொண்டு ஒரு தரப்பினர்கள் செயற்படுவதால் மாற்றுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தடைப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்களவர்கள் பொலநறுவை, ஹபரண மற்றும் அம்பாறை ஆகிய பகுதிகளில் வாழ்ந்தார்கள். போர்நிறைவடைந்ததன் பின்னர் உரிய ஆவணங்களுடன் திம்புலாகல பகுதியில் சிங்களவர்கள் மீண்டும் குடியேறினார்கள். மயிலத்தமடு - மாதவனை பகுதி பண்ணை மேய்ப்பாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக திம்புலாகலப் பகுதியில் வாழும் சிங்களவர்கள் வெளியேறவேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாகச் செயற்படுகிறார். சிங்களவர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு ஒரு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கில் சிங்களவர்கள் வாழக்கூடாது என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு தமிழ் அரசியல் தரப்பினர் செயற்படுவதால் முரண்பாடுகளுக்கு தீர்வு காண முடியாமல் உள்ளது. பிரச்சினைகள் நீண்டு செல்கின்றன - என்றார். (எ-இ)

## தேர்தலை நடத்திவிட்டு மறுசீரமைப்பை முன்னெடுங்கள்

### மஹிந்த தேசப்பிரிய ஆலோசனை

அரசாங்கத்தின் உத்தேச தேர்தல் சீர்திருத்தங்களை வரவேற்றுள்ள முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, முன்னர் கைவிடப்பட்டுள்ள தேர்தல்களை நடத்தவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

"தேர்தல் சட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ஒன்பது பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர், ஆறுமாதங்களில் தனக்கு வழங்கப்பட்டுள்ள பணியை ஆணைக்குழு பூர்த்தி செய்வது மிகவும் கடினம், பல மணித்தியாலங்கள், பலநாள்கள் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டியிருக்கும், ஒருவருட காலத்துக்கு கூட இது நீடிக்கலாம். சீர்திருத்தங்கள் வரவேற்கத்தக்கவை. அவை இந்தக் காலத்தின் தேவை. எனினும் இவற்றுக்கு முன்னர் எங்களுக்கு காணாமற்போன மாகாணசபைத் தேர்தலும் புதைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலும் அவசியம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)

## தேர்தல் வெற்றிக்கு பரந்துபட்ட கூட்டணி

### ஐ.தே.க.நடவடிக்கை ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 23

வரலாற்றில் இல்லாத வகையில் பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதற்கான நடவடிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது. உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும். அதில் நாம் வெற்றிபெறுவோம் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட சம்மேளனம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் அனைத்து இன மக்களையும் அரவணைத்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிக்கக்கூடிய கட்சிதான் ஐக்கிய தேசியக் கட்சி. எமது கட்சியைவிட்டுச் சென்றவர்களுக்கு தாய்வீடு திரும்புமாறு அழைப்பு விடுகின்றோம். கடந்தமுறை 30 இலட்சம் வாக்குகளை ஐக்கிய தேசியக் கட்சி இழந்தது. சில தரப்புகளால் முன்னெடுக்கப்பட்ட தவறான பரப்புரையே அதற்குக் காரணம். மக்கள் இன்று உண்மையை உணர்ந்துள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவால்தான் நாட்டை முன்னேற்றமுடியும் என்பதை ஏற்றுள்ளனர். அவர் கட்சி பேதமற்ற ஜனாதிபதியாக அடுத்த முறையும் தெரிவாவார் - என்றார். (ச-44)

## ஐ.தே.க.வில் மறுசீரமைப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் (ஐ.தே.க.) யாப்பில் திருத்தம் கொண்டு வரப்பட்டு, கட்சியில் கட்டமைப்பு ரீதியிலான மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசிய மாநாட்டில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம் செயற்குழுவில் இருந்து கட்சியின் அதிகாரங்கள் புதிய குழுவுக்கு மாற்றப்படும் என கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய திருத்தங்களின் கீழ் செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவுள்ளது.

கட்சியில் 100க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு செயற்குழு இருப்பதால் அதனை மாற்றியமைக்கும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தீர்மானங்களை உடனடியாக எடுக்கும் வகையில் பொறுப்பைக் கொண்ட ஒரு உயர் பதவிக் குழுவை கட்சி கொண்டிருக்கும். (ஒ-இ)

## புதினம் தெரியுமோ?

இந்தமுறை நடந்த ஹர்த்தால் கனபேருக்கு நல்ல பாடம் படிப்பிச்சிருக்குது. ஒண்டு, ஏசி அறைக்குள்ள இருந்து ஹர்த்தால் எண்டு அறிவிச்சு, குளிர்காயிற அரசியல்வாதியளுக்கு இனிமேல் அப்பிடியான சேட்டையள் சனத்திட்டச் செல்லாது எண்ட பாடம். மற்றது, இப்பிடியான போராட்டங்களை எல்லாத்தரப்பையும் கதைச்சுப் பேசி அறிவிக்காட்டி அது பிசுபிசுத்துப் போகும் எண்ட பாடம். மூண்டாவது பாடம், போராட்டங்களில 'துடக்கு' பார்த்து பம்மிற கும்பல்களை சனங்கள் நம்பக்கூடாது எண்ட பாடம்.

இந்தமுறை என்னதான் ஏழு கட்சிக்காரரும் வடக்கு-கிழக்கு எண்டு ஓடித்திரிஞ்சு நோட்டீஸ் குடுத்து, அறிக்கையள் விட்டு கடும்வேலை செய்தாலும், ஹர்த்தால் பெரியளவில வெற்றியில்லை எண்டதுதான் உண்மை. ஏனெண்டால் ஏற்கனவே மனிதச்சங்கிலிப் போராட்டத்தை அறிவிச்சு, அது அரைகுறையோட அறுந்துபோனதாலதான் அவசரமா இந்தக் ஹர்த்தாலுக்கு அறிவிச்சவை. அதில கிடைச்ச தோல்வியை ஹர்த்தாலை நடத்தி 'பலன்ஸ்' பண்ணலாமெண்டதுதான் அவையின்ர கணக்கு. ஆனால் சனம் வேற கணக்குப் போட்டதால, இந்தமுறை வெள்ளிக்கிழமை றோட்டால போகேக்க ஒருத்தருக்கும் ஹர்த்தால் எண்ட நினைப்பே வரேலை. பஸ்ஸெல்லாம் வழமை மாதிரி ஓடினது. பள்ளிக்கூடங்கள் தொடக்கம் கச்சேரி வரைக்கும் எல்லாம் இயங்கினது. கடையளும் இடைக்கிடை திறந்திருந்தது. 'இனிமேல் கண்டதுக்கும் ஹர்த்தால் எண்டு அறிவிச்சால் இதுதான் நிலைமை' எண்டதை அரசியல்வாதியளுக்கு சனங்கள் சொல்லாமல் சொல்லியிருக்கினம். அதோட எல்லாத் தரப்போடையும் ஒழுங்காகக் கதைச்சுப் பேசி ஹர்த்தாலை அறிவிச்சிருந்தாலும் இந்தநிலைமை வந்திருக்காது.

முக்கியமா சீ.ரி.பி. பஸ்காரரோட ஹர்த்தாலை அறிவிச்சவை கதைச்சுப் பேசவேயில்லை. முதல் நாள் சீ.ரி.பி. காரரிட்ட போன் பண்ணி 'நாளைக்கு பஸ் ஓடுமோ?' எண்டு பட்சி கேட்டது. அதுக்கு அவை 'எங்களிட்ட ஆரும் ஹர்த்தால் நடத்திறம். அதால பஸ் ஓடாமல் பாருங்கோ எண்டு கேக்கேலை. சிலவேளை எங்களிட்ட கேட்டிருந்தால் ஓடாமல் விட்டிருப்பம். அப்பிடிக் கேக்காததால நாங்கள் வழமை போல நாளைக்கு பஸ் ஓடுவம்.' எண்டிச்சினம். அதை மாதிரி கல்வித்திணைக்களத்தோடையும் முதலே கதைச்சிருந்தால், எக்ஸாமையாவது நிப்பாட்டியிருக்கலாம். எக்ஸாம் நடக்காட்டி கனபிள்ளையள் அண்டைக்கு பள்ளிக்கூடம் போயிருக்காது. ஆனால் அப்பிடிச் செய்யாததால வழமையாப் போறதை விடவும், ஹர்த்தால் நாளில தான் 98 சதவீதமான பிள்ளையள் பள்ளிக்கூடம் போயிருக்கெண்டால் பாருங்கோவன்.

இப்பிடியெல்லாம் ஹர்த்தால் சரிவர நடக்காததால, ஹர்த்தாலுக்காக முன்வைச்ச கோரிக்கையளை சனங்கள் ஆதரிக்கேலை எண்டு அர்த்தமில்லை. நீதிபதிக்கு நியாயம் கிடைக்கோணும் எண்டதிலையும், மேய்ச்சல் தரவை ஆக்கிரமிப்பு நிப்பாட்டுப்படோணும் எண்டதிலையும் சனங்களும் உறுதியாகத்தான் நிக்கினம். ஆனால் அதுக்காகப் போராடுறவை சரியான வழியைக் காட்டுகினமில்லை எண்டதாலதான் சனம் இந்தமுறை ஹர்த்தாலைப் பெரிசா மதிக்கேலை.

ஹர்த்தால் படிப்பிச்ச முதல் ரண்டு பாடங்களையும் சொல்லியாச்சு. அப்ப மூண்டாவது பாடம்? அதை நாளைக்கு பட்சி சொல்லும்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நியூஸியை வீழ்த்தி இந்தியா பேரெழுச்சி




உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நியூஸிலாந்தைத் தோற்கடித்தது இந்திய அணி. கடந்த பல்லாண்டுகளாக ஐ.சி.சி. தொடர்களில் நியூஸிலாந்திடம் இந்திய அணி தோல்வியடைந்துகொண்டிருந்த நிலையில் நேற்று இந்த வரலாற்றை இந்தியா மாற்றியெழுதியது.

முதலில் துடுப்பெடுத்தாடியது நியூஸிலாந்து. அணி. ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார் கொன்வே. வில் ஜங் 17 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். நியூஸிலாந்து அணி 19 ஓட்டங்களுக்கு இரு இலக்குகளை இழந்து தடுமாறியது. இளம் வீரர் ரச்சின் ரவீந்திராவின் பிடியெடுப்பைத் தவறவிட்டார் ஜடேஜா. வாய்ப்பைப் பயன்படுத்தி சரிவிலிருந்து மீண்டது நியூஸிலாந்து. டாரி மிச்செலும் கைகொடுக்க பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது நியூஸி. இருவரும் அரைச்சதம் கடந்தனர். 75 ஓட்டங்களுடன் ரச்சின் ரவீந்திரா ஆட்டமிழந்தார். ஒருமுனையில் மிச்செல் நிலைத்து நின்றாலும் மறுமுனை பலவீனமாகவே இருந்தது. சதம் கடந்தார் மிச்செல். கிளென் பிலிப்ஸ் பெற்ற 23 ஓட்டங்களே பின்வரிசையில் அதிகபட்சம். முடிவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது நியூஸிலாந்து.

பந்துவீச்சில் சமி 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்,

இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களான ரோகித், கில் இணை. இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது இந்திய அணி. 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித். அடுத்த சில நிமிடங்களில் கில் 26 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். வழக்கம்போல் நிதானமான ஆட்டத்தை ஆரம்பித்தார் கோலி. மறுமுனையில் ஸ்ரேயஸ் 33, ராகுல் 27 என்று சொல்லிக்கொள்ளும்படியான இணைப்பாட்டத்தை வழங்கினார்கள். கோலியுடன் இணைந்தார் ஜடேஜா. இருவரும் இணைந்து இந்திய அணியை வெற்றியின் அருகில் அழைத்துச் சென்றனர். கோலி 95 ஓட்டங்களுடன் களத்திலிருந்த வேளை, வெற்றிக்கும் 5 ஓட்டங்களே தேவைப்பட்டன. சிக்ஸர் அடிக்கமுயன்று ஆட்டமிழந்தார் கோலி. ஆட்டத்தை பவுண்டரியுடன் முடித்தார் ஜடேஜா. அவர் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

## உதயனின் பரிசுக்குவியல்

தினம் ஒரு பரிசு 19

ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இன்றைய (23.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ................................................

பெயர் : ................................................
முகவரி : ................................................
................................................
தே.அ.இல : ................................................
தொ.இலக்கம் : ................................................

மெகா பரிசு

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ................................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ................................................

பெயர் : ................................................
முகவரி : ................................................
................................................
தே.அ.இல : ................................................
தொ.இலக்கம் : ................................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

பாகிஸ்தான் - ஆப்கானிஸ்தான்

PCB

இடம் : சென்னை
நேரம்: பி.ப. 2.00

# திடீர் பனிப்பொழிவால் நிறுத்தப்பட்ட ஆட்டம்!




இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான நேற்றைய ஆட்டம் சிறிதுநேரம் இடைநிறுத்தப்பட்டது. எதிர்பாரா விதமான நிலவிய திடீர் பனிப்பொழிவே ஆட்டம் இடைநிறுத்தப்பட்டமைக்குக் காரணம்.

நேற்றைய ஆட்டம் இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள தர்மசாலாவில் இடம்பெற்றது. குளிர் பிரதேசமாகையால் பனிப்பொழிவும் மழையும் ஆட்டத்தில் அவ்வப்போது கனதியான செல்வாக்குச் செலுத்தும். எனினும் பனிப்பொழிவால் ஆட்டம் இடைநிறுத்தப்படுவதில்லை. தர்மசாலாவில் பனியால் ஆட்டம் இடைநிறுத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். (ம)

## தினம் ஒரு பரிசு நாள் 17 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| கி.டிஷானி | குருநகர் | பா.பார்தீபன் | சுன்னாகம் |
| சு.வினோதினி | நாவாந்துறை | பு.கோபிஷாந் | நெடுந்தீவு |
| எல்.மதுஷா | இருபாலை | கே.குகதீஸ் | இரணைமடு |
| சி.தியாகேஸ்வரி | கோப்பாய் | எல்.லதுவன்யன் | சுதுமலை |
| சா.ஆரணி | வவுனியா | என்.நிதர்ஷா | ஊரெழு |
| த.விஜயன் | மருதனார்மடம் | அ.ஆர்யண் | பம்பைமடு |
| ஆ.பிருந்தாபன் | தாவடி | ரி.ரித்திகன் | யாழ்.நகர் |
| செ.யோகேஸ்வரன் | கிளிநொச்சி | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பலஸ்தீனர் - தமிழர்கள் - காஸா

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோநிலையால், காஸா முனையில் ஏற்பட்டுள்ள போர்நிலை தொடர்பிலும் அங்கு தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்பிலும் இலங்கை நாடாளுமன்றத்தில் விவாதங்கள் எழத்தொடங்கியுள்ளன 'இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோநிலை தவறு. கிழக்கு ஜெருசலேமை மையமாகக்கொண்ட பலஸ்தீனத்தை இஸ்ரேல் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளவேண்டும்' என்பதாகத்தான் அநேகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியிருக்கின்றனர். வெளிப்படையாகச் சொல்வதாயின் 'இஸ்ரேல் பலஸ்தீனத்தை அங்கீகரிக்கவேண்டும்' என்பதை அவர்கள் எந்தச் சமரசமும் இன்றி ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

பலஸ்தீனர்கள் மீதான (காஸா) இஸ்ரேலின் ஆக்கிரமிப்பானது பின்புலமின்றிய விடயமல்ல. அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் நேட்டோ கூட்டணியிலுள்ள இராணுவ வல்லாதிக்கத்தைக்கொண்ட நாடுகளின் அனுசரணையில்தான் இஸ்ரேல் இந்தத் தீவிரமானதும் – கொடூரமானதும் –மிருகத்தனமானதுமான ஆக்கிரமிப்பை முன்னெடுத்துக்கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில், பலஸ்தீனத்தின் பக்கமுள்ள நியாயப்பாட்டை 'நாணயங்களால் நெய்யப்பட்ட வர்த்தகச் சுழற்சிக்கு அப்பாற்பட்டு' எதிர்த்தமைக்காக இலங்கை நாடாளுமன்றத்தை எத்தனை பாராட்டினாலும் அதுதகும், இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வலியை உணராதவனைவிடவும், வலி உணர்ந்து இரங்காதவன்தான் கொடூரமானவன் என்பர். இலங்கையின் நிலையும் அதுவே. பலஸ்தீனத்தின் நிலையை – இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மனோநிலையை இலங்கை நாடாளுமன்றம் நன்கு உணர்ந்திருக்கின்றது. வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கருத்துகள் எந்தச்சந்தேகமுமின்றி – மனக்கிலேசமுமின்றி அதையேதான் மெய்ப்பிக்கின்றன. ஆனால், பலஸ்தீனத்துக்காக உருகும் இதே சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் இலங்கையில் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு – வலியுறுத்தல்களுக்கு – நீதிக்கான கண்ணீருக்கு என்ன பதிலைக் கொடுத்தார்கள்? இது விடயத்தில் என்ன நிலைப்பாட்டில் இருந்தார்கள்? இருக்கிறார்கள் என்ற சுயபரிசீலனை அவர்களுக்கு இப்போது மிகப்பிரதானமானது.

இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமானது என்ற சிந்தாந்தமே 30 ஆண்டுகளாக இந்தத் தீவு குருதிச் சகதிக்குள் குளித்தெழும்பக் காரணமானது. இதிலிருந்து எந்தப் பாடத்தையும் இலங்கை இன்னமும் கற்றாகவில்லை. வெடுக்குநாறிமலையில் அமைக்கப்பட்டிருந்த சிவலிங்கமும் இதர தெய்வங்களின் உருவச்சிலைகளும் அண்மையில், அடியோடு பெயர்த்தெடுக்கப்பட்டு உடைத்துச் சிதிலப்படுத்தப்பட்டன, குருந்தூர்மலையில் ஆதிசிவனின் நிலையோ அந்தரப் பிழைப்பாக மாறியிருக்கின்றது, கிழக்கில் தமிழர்களின் ஏகப்பட்ட வாழ்விடங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன, மேய்ச்சல் தரவைகள் சிங்களக் காடையர்களால் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இஸ்ரேலிய மனோநிலைக்கு இம்மியும் குறைவில்லாத விடயங்கள் இவை. ஆக, காஸாவில் இஸ்ரேல் பலஸ்தீனர்களுக்கு எதைச் செய்கின்றதோ அதைவிட மோசமாக இலங்கைக்குள் தன் சொந்த மக்களுக்கு எதிராகவே வினையாற்றிக் கொண்டு எவ்வாறு இஸ்ரேலை எதிர்க்கமுடியும்? பலஸ்தீனர்களை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். தமிழர்களை நீங்கள் அங்கீகரிப்பீர்களா? என்று இஸ்ரேல் கேட்டால் இதற்கு இலங்கை நாடாளுமன்றத்தின் பதில் என்னவாகவிருக்கும்.

இதேவேளை – 'இலங்கை விவகாரத்தில் கனடா கருத்துச்சொல்லக்கூடாது. கனேடிய நாடாளுமன்றம் இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பான விவாதங்களை நடத்தக்கூடாது' என்று கொக்கரித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர்தான், இப்போது காஸா தொடர்பான விவாதத்தில் பலஸ்தீனத்துக்காகக் கருத்துகளைத் தெறிக்கவிட்டிருக்கின்றனர். இலங்கை விவகாரத்தில் கனேடிய நாடாளுமன்றம் விவாதிக்கக்கூடாது என்றால், காஸா விவகாரத்தில் இலங்கையும் 'கப்சிப்' என்றல்லவா இருக்கவேண்டும்' என்று கனடா கேட்டால் இலங்கை என்ன பதில் சொல்லமுடியும்?


இங்கே, எல்லாவற்றையும்விட அபத்தமான விடயமொன்றும் உள்ளது. அது பலஸ்தீனத்தின் பாற்பட்டது. போர் முடிந்த பின்னர் பலஸ்தீனத்துக்கு அப்போதைய இலங்கை ஜனாதிபதி மஹிந்த மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின்போது, பலஸ்தீனத்தின் உயர்விருது அவருக்கு வழங்கப்பட்டது. தன்னைப்போன்று போராடும் ஓர் இனக்குழுமமான தமிழர்களைக் கொன்றுகுவித்த குருதிக்கறையோடுதான், மஹிந்தவின் அந்த வருகை அமைந்ததை அறிந்தும்கூட, அதைக் கருத்திற்கொள்ளாது பலஸ்தீனம் செயலாற்றியது. கண்ணீரைத் துடைக்கவேண்டிய கைகளே அன்று கத்தியெடுத்து கழுத்தறுத்தவரை ஆரத்தியெடுத்து வரவேற்றன. ஆயினும் பலஸ்தீனம் அங்கீகரிக்கப்படவேண்டும் என்றுதான் ஈழத்தமிழர்கள் விரும்புகின்றனர், ஏனெனில் தமிழர்கள் வலியுணர்ந்தவர்கள்.



## நாளொரு நல்வார்த்தை

பிறர் மனம் வருந்த செயல் புரியாதீர்கள்.
உங்கள் உரிமையை விட்டு[illegible]தீர்கள்.
பிறர் உரிமையில் தலையிடாதீர்கள்.

- ஜோன்மில்டன் -




# மின்சாரக்கட்டண உயர்வுக்கு எதிராக மக்கள் போராட்டம்

**கொழும்பு, ஒக்.23**

**மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் பாணந்துறை - ஹொரன வீதியில் மக்கள் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.**

மக்கள் போராட்ட இயக்கத்தினரின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் தீப்பந்தங்களையும், பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

அதேவேளை, மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராக கண்டியிலும் பொதுமக்கள் தங்களது எதிர்ப்புகளை வெளிப்படுத்தியுள்ளனர். நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவுவேளையில் தீப்பந்தங்களுடன் வீதிக்கு இறங்கிய மக்கள் மின்கட்டண அதிகரிப்புக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ-இ)

# செலவுகளுக்கு ஏற்றவாறு மின்கட்டணத்தைப் பேணுக

## ஐ.எம்.எப். பிரதிநிதி தெரிவிப்பு

மின்சாரக் கட்டணத்தை செலவுகளுக்குப் பொருந்தும் வகையில் பேணவேண்டியது அவசியம் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதித் தலைவர் கத்ஸ்யரினா ஸ்விரிட் சென்கா வலியுறுத்தியுள்ளார். வொஷிங்டனில் நடைபெற்ற நிகழ்நிலைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மின்சாரம் தொடர்பான நட்டத்தை ஈடுசெய்வதற்கான துரித நடவடிக்கையை முன்னெடுக்கவேண்டியது மிகவும் முக்கியமானது என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். அவ்வாறு இல்லாது விட்டால் வரிசெலுத்துபவர்கள், சமூகத்தில் ஆபத்தை எதிர்நோக்கும் தரப்பினருக்கு அது சுமையாக அமைந்துவிடும். சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிதி உதவித் திட்டங்களிலும் அது முக்கியமானதொரு அங்கமாகும்.

வரி செலுத்துபவர்களின் மீதான சுமையைக் குறைப்பதற்கு வலுவான சமூகப் பாதுகாப்பொன்றே இருக்கவேண்டும். அரசு ரீதியான தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு அமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவேண்டும். அதன்மூலம் மத்திய கால, நெடுங்காலத்துக்கு ஏற்றவகையில் மின்சாரச் செலவுகளைக் குறைத்துக்கொள்ளவேண்டும்.

இலங்கையின் அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆகவே அந்தப் பணிகள் கிரமமாக வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (எ-இ)

# மின்கட்டண அதிகரிப்பு மஹிந்தவும் கவலை

கொழும்பு, ஒக். 23

மின்சாரக் கட்டணத்தை மீண்டும் அதிகரிப்பது தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் மக்களிடம் இருந்து பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சாரக் கட்டணத்தால் மக்கள் மிகவும் சிரமத்துக்குள்ளாகியுள்ளதாகவும், தான் பயணிக்கும் அனைத்து இடத்திலும் மக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி வருவதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஒ-இ)

நாளை

17.10.2023
செவ்வாய்க்கிழமை
ஐப்பசி 07

சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 03.02 - 04.32

விஜயதசமி, கேதாரகௌரி விரதம் ஆரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர் தாயகம் வர எண்ணவில்லை!

## இஸ்ரேலுக்கான தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 23

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில், இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்கள் நாட்டுக்குத் திரும்ப விருப்பம் தெரிவிக்கவில்லை என இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் ஹமாஸ் தாக்குதல் நடத்தியதில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காணாமற் போயுள்ளார்.

இஸ்ரேல் அதிகாரிகளின் அறிவிப்பையடுத்து 17 இலங்கையர்கள் வடக்கிலிருந்து காஸாவின் தெற்குப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தநிலையில் இஸ்ரேலிலுள்ள அனைத்து இலங்கையர்களையும் இராஜதந்திரப் பணிகளின் மூலம் மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர இலங்கை அதிகாரிகள் தயாராக இருக்கும் நிலையில் இஸ்ரேலின் டெல் அவிவ் மற்றும் ரமல்லா ஆகிய நகரங்களிலிருந்து கோரிக்கைகள் எவையும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# உக்ரைன் - ரஷ்யா போர் கோத்தாவை அனுப்பியது



## இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் தொடர்பில் ரணிலுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 23

**உக்ரைன் - ரஷ்யா போரால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கங்களால்தான் கோத்தாபய ராஜபக்ச வீட்டுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது. இஸ்ரேல் - ஹமாஸ் போரால் மீண்டும் இந்நிலைமை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் அரசு தயார்ப்படுத்தல் குழுவொன்றை அமைத்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறி இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையே போர் தீவிரமடைந்து வருவதால், உடனடியாக போர்நிறுத்தத்தை அறிவிக்கவும், அமைதியான தீர்வுக்குத் தலையிடவும் அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்க ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தல் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கம்மன்பில மேலும் தெரிவித்ததாவது,

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 'வீட்டோ' அதிகாரம் கொண்ட அமெரிக்காவும், பிரான்ஸும் இணைந்துதான் இஸ்ரேலை உருவாக்கும் முயற்சிக்கு தலைமைத்துவம் வழங்கின. இதில் பிரிட்டனுக்கும் பங்குள்ளது. தமது நாட்டில் பெரும்பான்மை இனத்துக்கும், யூதர்களுக்கும் இடையில் இருந்த பிரச்சினையை மேற்படி நாடுகள் அரபுலகம் நோக்கி ஏற்றுமதி செய்தன. அமெரிக்கா நோக்கிவந்த யூத பிரச்சினை மத்திய கிழக்கு நோக்கித் திருப்பப்பட்டது.

எனவே, இந்தப்பிரச்சினையின் ஆரம்ப கர்த்தாக்களான அமெரிக்கா, ஜேர்மன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஐ.நா.வில் பிரதான கதிரைகளில் இருக்கும்வரை, இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சினையில் ஐ.நா.வால் ஒன்றும் செய்யமுடியாது. இந்தப்பிரச்சினையை ஐ.நா.வால் தீர்க்கமுடியாது. இந்தியா, சீனா, ரஷ்யா, பிரேஸில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் அமைப்பு இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத் தலையிட வேண்டும்.

அதேவேளை, இந்தப் பிரச்சினை இலங்கைக்கு எவ்வாறு தாக்கம் செலுத்தும், எதனை எதிர்கொள்வதற்கு எவ்வாறு தயாராக வேண்டும் என்பது பற்றி இலங்கைக்குள் இன்னும் கருத்தாடல் ஏற்படவில்லை.

மத்திய கிழக்கு நாடுகளில் இலட்சக்கணக்கான இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர். போர் நிலைமையால் அவர்கள் வேலையை இழந்து வீடு திரும்புவார்களா என்ற ஐயம் உள்ளது. வேலை இழப்பு என்பது வேறு கதை, ஆனால் சவப்பெட்டியில் வருவார்களோ என்ற அச்சம் உள்ளது.

உக்ரைன் - ரஷ்யா போரால் எரிபொருள் விலை அதிகரித்தது, சமையல் எரிவாயு, நிலக்கரி என்பவற்றின் விலைகளும் அதிகரித்தன. இதனால் மின்வெட்டு ஏற்பட்டது. வரிசை யுகம் உருவானது. மக்கள் வீதிக்கு இறங்கினர். வெளிநாட்டுச் சக்திகளின் வலைக்குள் சிக்கினர். இறுதியில் கோத்தாபய ராஜபக்ச வீடு செல்ல வேண்டி வந்தது.

இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் இருக்க, இந்தப்பிரச்சினையால் (இஸ்ரேல் - ஹமாஸ்) எமது ஏற்றுமதி வருமானம் குறைந்தால் என்ன செய்வது, சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தால் என்ன செய்வது, வெளிநாட்டு முதலீடுகள் குறைந்தால் என்ன நடக்கும் என்பன பற்றி ஆராய வேண்டும். இதற்காக தயார்ப்படுத்தல் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் - என்றார். (ஒ.44)

# இடைவிலகிய மாணவர் மீண்டும் பாடசாலைக்கு

## பூநகரியில் நடவடிக்கை

கிளிநொச்சி, ஒக். 23

பூநகரி பிரதேச பாடசாலைகளில் இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக சிறுவர் பிரிவுக்கு பாடசாலைகள் வழங்கிய தகவல்களுக்கமைய, பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு அலகும் பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகமும் இணைந்து இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டன.

இடைவிலகிய மாணவர்களின் வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று மாணவர்களுடைய தேவைகளைக் கேட்டறிந்து அதனைத் தீர்ப்பதற்கு வழியேற்படுத்தப் பட்டது.

அதற்கமைய இடைவிலகிய மாணவர்கள் அடுத்த வாரம் தொடக்கம் பாடசாலைக்குச் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-9)




கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நூற்றாண்டு நிறைவு விழாவில் கலாசாலையின் முன்னோடிகளாக திகழும் சேர். பொன்னம்பலம் இராமநாதன், காரைநகர் அருணாசலம் உபாத்தியாயர், கோப்பாய் சுவாமிநாதன், அதிபர் பொன்னையா போன்ற 18 பெருந்தகைகளது வேடங்களை தாங்கிக் கலந்து சிறப்பித்த நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்கள் கௌரவிப்பு கடந்த 19ஆம் திகதி வியாழக்கிழமை மேற்படி கலாசாலையின் 98/99 அணியினரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மேலதிக மாவட்டச்செயலர் சிவபாலன் குணபாலன் கலந்து சிறப்பித்தான். ஆசிரிய கலாசாலை அதிபர் சலலீசன், பிரதி அதிபர் க.செந்தில்குமரன், ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா மற்றும் கலாசாலைச் சமூகத்தினர் எனப் பலர் கலந்துகொண்டு கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய சமூகத்தினரைப் பாராட்டிக் கௌரவித்தனர். (ய)



# கசிப்புடன் இளைஞர் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக். 23

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய்ப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய செல்வபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே மேற்படி இளைஞர்கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (ம-125)

# 3 தளபதிகளுக்கு தூதுவர்கள் பதவி

கொழும்பு, ஒக். 23

மூன்று தளபதிகளுக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோகணதீர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதியும் பாதுகாப்புப்படைகளின் பிரதானியுமான சந்திரசிறி விஜேதுங்க பாகிஸ்தானுக்கான தூதுவராகவும், ஓய்வுபெற்ற கடற்படைத் தளபதி டமித் நிஷாந்த சிறிசோம கியூபாவுக்கான தூதுவராகவும், ஓய்வுபெற்ற விமானப்படைத்தளபதி சுதர்சன் கரகொட பத்திரண நேபாளத்துக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-6)

# சமுர்த்தி மேம்பாட்டு வாரம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

சர்வதேச வறுமை ஒழிப்புத் தினத்துடன் இணைந்த மேம்பாட்டு வாரத்தை அனைத்து சமுர்த்தி வங்கிகளிலும் கடைப்பிடிக்க சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த மேம்பாட்டு வாரம் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் மற்றும் ஒவ்வொரு வங்கி வலயங்களுக்குட்பட்ட பகுதிகளில் பத்து வீட்டுத் தோட்டப் பயனாளிகளைத் தெரிவுசெய்து விதைகள் மற்றும் இதர வசதிகளை வழங்குதல் போன்ற செயற்றிட்டங்களை செயற்படுத்துமாறு யாழ். மாவட்ட அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் சமுர்த்தித் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் அறிவித்துள்ளார். (ச-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலிருந்து 'லியோ' பார்க்க சென்றவர்களுக்கு நேர்ந்த கதி

வவுனியா, ஒக். 23

தமிழர் பிரதேசங்களில் இடமின்மையால் அநுராதபுரத்துக்கு லியோ திரைப்படத்தை பார்வையிடச் சென்றவர்கள் இறுதியில் ஏமாற்றத்துடன் திரும்பிய சம்பவம் நடைபெற்றுள்ளது.

நடிகர் விஜயின் நடிப்பில் வெளியாகிய லியோ திரைப்படம் திரையிடப்பட்டு அனைத்து திரையங்கிலும் ஆசனங்கள் முழுமையாக நிறைந்துள்ளமையுடன் தமிழர் பகுதிகளில் படத்துக்கான நுழைவுச் சீட்டுப் பெறுவதில் பல ரசிகர்கள் ஏமாற்றமடைந்திருந்தனர்.

இந்த நிலையில் லியோ திரைப்படம் அநுராதபுரம் பேருந்து நிலையத்துக்கு அருகேயுள்ள திரையரங்கத்தில் திரையிடப்படவுள்ளதாக அவர்களின் இணையத்தளத்தில் முற்பதிவுக்கான வாய்ப்பு வழங்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, புத்தளம், திருகோணமலை ஆகிய பகுதிகளிலிருந்து பெரும்பாலானோர் திரையரங்குகளில் இரவு 7.30 மணிக்கு காட்சிக்கு முற்பதிவுகளை மேற்கொண்டிருந்தமையுடன் தூர இடங்களிலிருந்து வருகை தந்தமையால் பல மணிநேரமாக திரையரங்கு களில் காத்திருந்தனர்.

லியோ திரைப்படம் திரையிடப்பட்ட சமயத்தில் குறித்த படக் காட்சிகளின் ஒலியமைப்பு தெளிவின்மை காணப்பட்டது. பல மணி நேரமாக அவர்களின் தொழில்நுட்பப் பிரச்சினைகளைப் பார்வையிட்ட போதிலும் ஒலியமைப்பு சீராகவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த ரசிகர்கள் தமக்குத் தெளிவான ஒலியமைப்புடன் திரைப்படம் வெளியிடப்படவேண்டும் அல்லது பணத்தை மீளத்தருமாறு திரையரங்குகளின் வரவேற்பு இடத்தை முற்றுகையிட்டனர். இதனால் திரையரங்கில் பதற்ற நிலைமை அதிகரித்தமையுடன் அநுராதபுரம் பொலிஸார் பேருந்தில் வருகை தந்து திரையரங்கின் பாதுகாப்பை பலப்படுத்தினர்.

பல மணிநேரமாக அந்த இடத்தில் பதற்ற நிலைமை நிலவியமையுடன் தமக்கு நுழைவுச் சீட்டுப் பணத்தை மீளத்தருமாறு அல்லது தெளிவான ஒலியமைப்புடன் படத்தை திரையிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்குப் பதிலளித்த திரையரங்க நிர்வாகம் படத்தின் இறுவட்டில் உள்ள பிரச்சினையால் ஒலி தெளிவின்மை காணப்படுவதாகவும் பணத்தை கணக்குக்கு வைப்பிலிடுவதாகவும் தெரிவித்தனர். எனினும் திரையரங்க நிர்வாகத்தின் நம்பிக்கையில்லை என தெரிவித்தமையுடன் பணத்தை கையில் தருமாறும் ரசிகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இறுதியில் பொலிஸாரின் தலையீட்டில் நிர்வாகத்தினர் சில தினங்களில் வங்கிக்குப் பணத்தை வைப்பிலிடுவதாகத் தெரிவித்து கடிதத்தை எழுதி வழங்கியமையுடன் தவறுக்கு மன்னிப்பும் கோரியிருந்தமையுடன் தமது தனிப்பட்ட தொலைபேசி இலக்கத்தையும் வழங்கியிருந்தனர். இதனையடுத்து ரசிகர்கள் திரையரங்கைவிட்டு ஏமாற்றத்துடன் வெளியேறியிருந்தனர். (ஒ-18)

# பேக்கரி உற்பத்திகளின் விலையில் மாற்றமில்லை

பேக்கரி உற்பத்தி பொருள்களின் விலைகளில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படாது என சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணம் எதிர்காலத்தில் மீண்டும் அதிகரிக்கப்படும் பட்சத்தில், பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதும், பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை. ஆயினும் எமது துறையில் பெரும் நெருக்கடி காணப்படுகின்றது - என்றார். (ஏ-இ)

# சிறுவர் தினமும் கலை நிகழ்வும்

அளவெட்டி, ஒக். 23

அளவெட்டி தெற்கு கலைவாணி முன்பள்ளியின் சிறுவர் தின நிகழ்வும், வருடாந்த கலைவிழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கலைவாணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருமதி சத்தியதாசன் மாலா பங்கேற்று நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (ச-36)

# வாணிவிழா

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வாணிவிழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் பே.தன பாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். (ச-66)

# கோலப் போட்டி

சாவகச்சேரி, ஒக்.23

வரணி பொதுநூலகத்தால் வாணி விழாவை முன்னிட்டு நூலக எல்லைக் குட்பட்ட பாடசாலைகளின் தரம் 5 மாணவர்களிடையே கோலம் போடுதல் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

தேசிய வாசிப்பு மாதத்தின் ஓர் அங்கமாக நடத்தப்படும் இந்தப் போட்டிகள் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பாடசாலையிலிருந்து ஒரு மாணவர் வீதம் பங்குபற்றலாம் என்றும், போட்டிக்கு தேங்காய்ப்பூ மட்டும் பயன்படுத்தலாம் என்றும் நூலகர் சி. ஜெயகாந்தன் அறிவித்துள்ளார். (எ-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகம் பிறக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். இலாபம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்பட புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. செலவு செய்யவேண்டியிருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை கா மேற்கொள்வது நல்லது. தந்தைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பணியில் முன்னேற்றம் உண்டாகும். தொல்லைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். அனுகூலம் உண்டாகும். பிரமுகர்களின் சந்திப்பு ஆதாயம் தரும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** காரியங்கள் இழுபறியாகி முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சகோதரர்களை அனுசரித்துச் செல்லவும்.

**மகரம்:** பணப்புழக்கமும் செலவுகளும் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் முடிவது இழுபறியாகும். எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சகோதர வகையில் நன்மை ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகள் சாதகமாகும். வழக்கமான பணிகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். மாலையில் உறவினர்கள், நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

# துன்னாலை கண்ணகியில் மகிடாசுரன் போர் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 23

நவராத்திரி விழாவை முன்னிட்டு துன்னாலை மிந்திரன் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை மகிடாசுரன் போர் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2 மணியளவில் அருகிலுள்ள ஆலயங்களான ஆயில் நின்றொல்லை விநாயகர் ஆலயம் மற்றும் அல்லையம்பதி முருகன் ஆலயம் ஆகியவற்றுக்குச் சென்று மகிடாசுரன் தரிசனம் மேற்கொண்டு மீண்டும் ஆலயம் வந்தடைந்து மகிடாசுரன் போர் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ச-100)

# பரு. நீதிமன்றில் ஏலம் ரூ. 2 இலட்சம் கடந்தது!

யாழ்ப்பாணம், ஒக். 23

பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஏலம் விடப்பட்ட பொருள்கள் 2 இலட்சத்து 14 ஆயிரத்து 150 ரூபா தொகைக்கு எடுக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை நீதிமன்றில் அலுவலகப் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்ட பாவனைக்குதவாத தளபாடங்கள், கணினி மற்றும் திருட்டுச் சம்பவம் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புபட்டு பருத்தித்துறை பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட நிலையில் உரிமை கோரப்படாதிருந்த 23 சைக்கிள்கள், கோடரி, சவல், மீன்பிடி வலைகள் உள்ளிட்டவை நேற்றுமுன்தினம் ஏலத்துக்கு விடப்பட்டன.

இவை அனைத்தும் ஏலத்தில் 2 இலட்சத்து 14 ஆயிரத்து 150 ரூபா தொகைக்கு எடுக்கப்பட்டுள்ளன. (ச-100)

# 200 கிலோ ஹெரோய்ன் தெய்வேந்திரமுனையில் மீட்பு


200 கிலோவுக்கும் அதிகமான உயிர் கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் நெடுநாள் மீன்பிடிப் படகும் அதில் பயணித்த 5 சந்தேகநபர்களும் தெய்வேந்திரமுனை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்டுள்ள உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளின் பெறுமதி 4 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என கடற்படை தெரிவித்துள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 05 . 1942



மறைவு 26 . 10 . 2020

## அமரர் கிருஸ்ணபிள்ளை அருணகிரிராசா

திதி : ஐப்பசி பூர்வபக்க தசமி (23.10.2023)

காலம் பல உருண்டோடின
கண்ணிமைக்கும் நேரத்தில்
எம்மை மறந்தனையோ காலன் கொடியவன்
கதி கலங்க வைப்பான் உயிரையும் உடம்பையும்
எமக்கு அழித்த காலப்பெருவெளியில்
எம்மீது காட்டிய அன்பு அளவற்றது அழியாதது

உங்கள் ஆத்மா சாந்தியடைய

என்றும் உங்கள் நினைவுகளுடன்

குடும்பத்தினர்

(CS 26679) (K-1)


## வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்

இம்மாதம் 21 ஆம் திகதி முதல் தீபாவளி தினம் வரை

# இந்தியன் செலக்ஷன்

## தீபாவளி ஜவுளிக் கொண்டாட்டம்



பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள் மற்றும் டொப், பாட்டி புறொக், சேட், ரீ சேட், டெனிம் ஜீன்ஸ் மற்றும் சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகளையும் இன்னும் மங்கையர் மனங்கவரும் ஆடைத் தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

## விஷேட விலைக்கழிவு

டொப் 500/=

ரெடிமேட் சல்வார் 750 /=

கையிருப்பு உள்ளவரை மட்டுமே


காலம் : 21.10.2023 முதல் தீபாவளி தினம் வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்.

(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


# மரண அறிவித்தல்

## திருவாளர் சரவணமுத்து சிவராசா



யாழ்ப்பாணம், சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டா வில் மேற்கை (KKS Road) வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர் சரவணமுத்து சிவராசா அவர்கள் நேற்றுமுன்தினம் (21.10.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், ராதாவின் (பவா) அவர்களின் பாசமிகு கணவரும், உலகநாதன் (UK), நிர்மதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தேவராஜ் (D.O மாவட்ட செயலகம் - வவுனியா), செந்தூரன் (UK), ஜனோயா (ஆசிரியர், நவாலி மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுஜா (M.S.O. மாவட்ட செயலகம் - வவுனியா), மிதிலா (UK), சிவசொரூபன் (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு மாமாவும், ரிதஸ்கா, அக்ஷிகா, கிருஷ்ணவி, கிருஷ்விகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் சென்றவர்களான சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், ஞானசுப்பிரமணியம் மற்றும் ஜெகனாதாம்பிகை (தஞ்சி) கோண்டாவில் மேற்கு பாலச்சந்திரன் (கனடா) இராமச்சந்திரன் (கனடா), தவமணி (தேவி- கனடா), நகுலாம்பிகை (சந்திரா - கொழும்பு), சீதா (இந்திரா - கனடா), சூரியநாராயணன் (ஜேர்மனி), பத்மநிதி (ஜேர்மனி), ஸ்ரீவிக்கிரமநாராயணன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் (கோண்டாவில் மேற்கு KKS Road) அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

1624/6, துரையப்பா ஒழுங்கை,
K.K.S. Road, Kondavil West
Kondavil.

(CS 26692) (K-1)

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.
தேவராஜ் - 077 746 4171,
சிவசொரூபன்
076 848 2727, 076 879 2727

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணிகள்

கிளிநொச்சி, ஒக். 23

விசுவமடு, தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றையதினம் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் துப்புரவுப் பணியில் கலந்து கொண்டனர். (ம-27)


**The Royal College of Jaffna**

O/L, A/L, ஆங்கிலம், வணிகம், கணக்கீடு. I.C.T. சித்திர வகுப்புகள் சிறு குழுக்களாகப் பயின்று "A" சித்திபெற நடைபெறுகின்றன.

KUBERAN BUILDING, CHANKANAI TOWN.

Tel: 077 675 1649


## சித்திர வகுப்பு வித்தியாரம்பம்

கந்தர்மடத்திலுள்ள ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சிநிறுவனத்தில் வழமைபோன்று விஜயதசமி தினமான நாளை செவ்வாய்க்கிழமை சித்திர வித்தியாரம்பம் இடம்பெறவுள்ளது. பயில விரும்பும் மாணவர்கள் மாலை 4 மணிக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆசிரியர் கலாசாலை வாணி விழா

யாழ்., ஒக். 23

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் வாணி விழா நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அகில இலங்கை சைவ மகாசபையின் பொதுச் செயலாளர் மருத்துவ கலாநிதி ப.நந்தகுமார், சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ். பி.நாகரத்தினம் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)


**பெயர் மாற்றம்**

ரான்ஸ்போமர் வீதி மல்வம் உடுவிலில் வசிக்கும் பொன்னையா சண்முகானந்தம் ஆகிய நான் எனது பெயரை பொன்னையா சண்முகநாதன் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் பொன்னையா சண்முகநாதன் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 26690)(3/6) பொன்னையா சண்முகநாதன்

**விற்பனைக்கு**

இரண்டு மேசைகள், ட்ரெஸ்சிங் ரேபிள் (Dressing Table), கதிரை, சாப்பாட்டு மேசை, கதிரை விற்பனைக்குண்டு.

தொடர்பு : 75/9, முன் ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி ( தினேஸ் பேக்கரிக்கு அருகாமையில்)

076 6757654, 075 7710115

(cs 26696 M.1)

24.10.2023 (விஜயதசமி) புதிய பிரிவுகள் ஆரம்பம்!

யாழ் **கலாலயா** பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்

கேக் வகைகள், ஐசிங், Hair Dressing, Beautician (Facial), மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும்முறை, Cookery: மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், Ice cream தயாரித்தல் சனி, ஞாயிறு, கிழமை நாள் பிரிவுகள் நடைபெறும்.

0777110383 0742170383

**புலமை கல்வி நிறுவனம்**
சோதிவேம்படி லேன், மானிப்பாய்.

மாணவர்களுக்கான புலமைப்பரிசில் புதிய வகுப்புக்கள் விஜயதசமி அன்று ஆரம்பம்

ஆசிரியர் - திரு.க. கலாமோகன் (B.A, P.G.D.E, Dip.,in.Teach.)

காலம் - 24.10.2023 செவ்வாய்க்கிழமை

நேரம் - தரம் - 5 மாலை 4.00 மணி (தற்போது தரம் - 4)

- தரம் - 4 மாலை 4.31 மணி (தற்போது தரம் - 3)

தொடர்பு: 077 2121 915

குறிப்பு : பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன அதனால் பதிவுகளுக்கு முந்தவும்.

நிர்வாகி
புலமை கல்வி நிறுவனம்

(cs 52573) (N.1)

**செரண்டிப் சிறுவர் இல்லம் கிளிநொச்சி**

Serendip Children's Home
Giving in motion...

கிளிநொச்சியில் அமைந்துள்ள செரண்டிப் சிறுவர் இல்லத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

1. சங்கீதபாட ஆசிரியர். (Only on weekends)
2. வயலின் ஆசிரியர். (Only on weekends)
3. பேச்சுமொழி சிகிச்சையாளர். (Speech Therapist)
4. செயல் முறை மருத்துவ சிகிச்சையாளர். (Occupational Therapist)
5. உளவளத்துறை ஆலோசகர் (Counsellor)
6. சுத்திகரிப்பு பணியாளர்.(Cleaning Staff)
7. மலையக பிரதேசங்களுக்கான வெளிக்களப் பணியாளர். (Field Officer for Upcountry)

குறிப்பு : சம்பளம் நேர்காணலின்போது தீர்மானிக்கப்படும்


31.10.2023ற்கு முன்னர் தொடர்புகளை ஏற்படுத்தவும்

மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கு

077 557 1950 / 076 295 0555 / 074 099 5413

(cs 52573) (N.1)


# மரண அறிவித்தல்



பிறப்பு 22 . 10 . 1937

இறப்பு 21 . 10 . 2023

## இராமுப்பிள்ளை கனகசிங்கம் (பூபாலு)

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் - பிரதேச சபை, கொடிகாமம்)

முதலாம் வட்டாரம் முள்ளியவளையை பிறப்பிடமாகவும் அல்லாரை தெற்கு மீசாலையை வதிவிடமாகவும் 15-B குளப்பள்ள வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை கனகசிங்கம் (பூபாலு) அவர்கள் நேற்றுமுன்தினம் (21.10.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற சின்னராசா- நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகரத்தினம்மாள் (நவம்) அவர்களின் அன்புக் கணவரும், முருகுப்பிள்ளை, காலஞ்சென்ற தங்கப்பிள்ளை, இராசம்மா, காலஞ்சென்ற பொன்னம்பலம், பவளம், கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெயக்குமார் (சுவிஸ்), ஜெயசீலன் (லண்டன்), காலஞ்சென்ற ஜெயரூபன், அனுசியா (முகாமையாளர், இலங்கை வங்கி, மாங்குளம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜனி (அமுதா), ராஜகமலினி (அஜந்தா), உமையவன் (ஆசிரியர், வ/கல் நாட்டினகுளம் அ.த.பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்தன், குமரன், அபினாஷ், அஜய், அஸ்வின், அக்ஷயன், சப்தவி, ஆருஷி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-B குளப்பள்ள வீதி, சின்னப்புதுக்குளம், வவுனியாவில் அமைந்துள்ள அன்னாரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று நாளை (24.10.2023) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வவுனியா வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
அனுசியா - 077 986 5105
உமையவன் - 077 909 3457

(CS 26691) (K - 1)

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி குணமணி நாகலிங்கம்

துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், மீசாலை கிழக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணமணி நாகலிங்கம் நேற்று (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற புகையிரத பரிசோதகர் திரு. முருகேசுபிள்ளை நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், திரு. சின்னையா தம்பிப்பிள்ளை, திருமதி தம்பிப்பிள்ளை தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும், நவரத்தினம், சரஸ்வதி, குணபாலசிங்கம், யோகவதி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமலிங்கம், இரஞ்சிதமலர், மனோரஞ்சிதம், நவரஞ்சிதம், சுசீலா, இந்திரா, புஸ்பா, தனுஷா ஆகியோரின் அன்புத் தாயும், ராஜலட்சுமி, யோகராஜா, பாண்டியன், சிவலோகநாதன், வசீகரன், சுகேந்திரா, வைந்தன், காலஞ்சென்ற சுமேந்திரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 815 0649
077 923 5935

(er.40822) (N.1)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், மன்னார் நானாட்டான் பகுதியைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த மாணவனொருவனுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டதுடன், சிறுப்பிட்டி மேற்குப் பகுதியைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற குடும்பஸ்தர் ஒருவருக்கு மருத்துவத் தேவைக்கான நிதியுதவியும் அண்மையில் வழங்கப்பட்டது. (ச-66)




பேசாலை மன். சென். மேரிஸ் வித்தியாலயத்தில் ஆசிரியர்தினமும் சேவைநலன் பாராட்டு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. (ச-60)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பைச் சேர்ந்த அமரர் சி.கலாநிதியின் 10ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு அவரது குடும்பத்தினரால் மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தைச் சேர்ந்த 17 மாணவர்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்புச்செய்து வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப்பட்டன. (ச)



மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் தரம் - 3 முதல் க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு, தொடுகைமுறைகள், முறைப்பாட்டுப் பொறிமுறை, போதையற்ற உலகம் மற்றும் ஒழுக்கம் ஆகியவை தொடர்பில் விழிப்புணர்வுகள் மற்றும் கருத்துரைகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ச-66)



வி.பி. பவுண்டேஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு விசுவமடுவில் தூரப் பிரதேசத்திலிருந்து பாடசாலைக்குச் செல்லும் பொருளாதாரம் நலிவுற்ற மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ச-113)

# சாதனைக்காகச் சென்றவர்களால் தனுஷ்கோடிக்கரையில் பரபரப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 23

பாக்குநீரிணையை நீந்திக்கடக்கும் முயற்சிக்காக, மன்னாரில் இருந்து மூன்று படகுகளில் சென்று தனுஷ்கோடியில் தரையிறங்கிய இளைஞர்களால் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் இருந்து சிலர் இவ்வாறு உள்நுழைந்துள்ளமையை அவதானித்த இந்திய மீனவர்கள் இது தொடர்பில் தமிழகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சட்டவிரோதக் குடியேறிகள் அல்லது கடத்தல்காரர்கள் என்ற சந்தேகத்தின்பேரிலேயே அவர்கள்பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

இதையடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், மேற்படி இளைஞர்கள் தனுஷ்கோடிக் கரையில் இருந்து மன்னார் கரை வரையான பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சிக்காக வந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்திய பின்னர் அந்த இளைஞர்கள் தமது சாதனைப் பயணத்தைத் தொடர அனுமதித்தனர். (ம-213)

# காரை. இந்துக்கல்லூரியில் ஒலிசாதனப்பெட்டி திருட்டு!

யாழ்ப்பாணம், ஒக். 23

காரைநகர் இந்துக் கல்லூரியில் பாடசாலையில் கதவுடைத்து ஒலிசாதனப்பெட்டி திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-125)


## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 01 . 1940



இறப்பு 21 . 10 . 2023

### செல்வத்துரை தர்மவதி (மாணிக்கம்)

கணேசபதி, அல்வாய் வடக்கு அல்வாயை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் தற்போது குமரகோட்டம், அல்வாய் வடமேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்துரை தர்மவதி (மாணிக்கம்) அவர்கள் கடந்த (21.10.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகர் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வத்துரை அவர்களின் பாசமிகு மனைவியும், செல்வக்குமார் (லண்டன்), பாலகுமார் (லண்டன்), அமரர் உமா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானரஞ்சினி (ஜீவா - லண்டன்), ஜோதினி ஆன் (ஆனந்தி-லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர்களான தெய்வநாயகி, பிள்ளையம்மா கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேராயினி, மதிவதனி (மதி) ஆகியோரின் சிறிய தாயும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, லட்சுமிதேவி மற்றும் அற்புதசிங்கம், பரமசிங்கம், அமரர் சிவநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரகாசினி, பிரணவி, பிரதீகா, பிரணவன், பிரவீனா, பிரமிலன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது பெறாமகள் மதிவதனி அவர்களின் இல்லத்தில் இன்று (23.10.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்பு: 077 168 6494

CR 40821) A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேர்தல்கள்...

தேர்தல்கள் தொடர்பில் ஆளும் கட்சிக்குள்ளேயே அண்மைக்காலமாக கருத்து முரண்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. பெரமுனவில் பெருமளவானவர்களின் கோரிக்கை முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதாகவிருக்கின்றது. ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களோ முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றன. இந்த நிலையிலேயே ஆளும் கட்சிக் கூட்டத்தை ஜனாதிபதி கூட்டவுள்ளார்.

அரசமைப்புக்கு அமைய 2024 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தல் விடுக்கப்படவேண்டும். அதற்கான அதிகாரம் நிறைவேற்றதிகாரியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே காணப்படுகிறது. ஆனால் எதிர்வரும் நவம்பர் மாதத்துக்குப் பின்னர் ஜனாதிபதி விரும்பினால் முன்கூட்டிய தேர்தலுக்கான அறிவித்தலை விடுக்கமுடியும்.

இதன் பிரகாரமே, 2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான தயார்ப்படுத்தல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே முன்னெடுத்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவினங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி ஏற்கனவே உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## காஸாவின்...

பப்பட்டு காஸா பேரவலத்துக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மன்னார், முசலி தேசியப் பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற தேசிய மீலாதுன் நபி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் இன்று இங்கு நபிகள் நாயகத்தை நினைவுகூருகிறோம். நபிகள் நாயகம் கூறிய அதே கோட்பாடுதான் இன்று இலங்கையில் உள்ளது. எனவே இந்த விழாவைத் தேசிய விழாவாகக் கருதுகிறோம். அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதே எங்கள் கொள்கை. இன்றைக்கு மொராக்கோ முதல் இந்தோனேசியா வரை ஆபிரிக்கா, ஐரோப்பா என எல்லா இடங்களிலும் நபிகளாரின் இஸ்லாமியக் கோட்பாடு பரவியுள்ளது. நபிகளார் இந்தக் கோட்பாட்டை பிரசங்கித்தபோது, எல்லா கிறிஸ்தவ யூதர்களும் அந்தப் பகுதியில் வாழ்ந்தார்கள். எந்தப் பிரச்சினையும் அப்போது இருக்கவில்லை. ஆனால் இன்று பெரிய பிரச்சினைகள் உள்ளன. குறிப்பாக, பலஸ்தீன விவகாரம் தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது.

20 உணவு லொறிகள் காஸாவுக்கு கொண்டு செல்லப்பட்டதாகக் கேள்விப்பட்டோம். ஆனால் இது போதுமா என்ற கேள்வி எழுகிறது?

இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக பலஸ்தீன மக்கள் காஸா பகுதியில் சிக்கித் தவிக்கின்றனர். அந்த மக்களின் துயரத்தை நாங்கள் மன்னிக்கவில்லை. அந்த மக்களுக்குத் தேவையான உணவுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உணவு இஸ்ரேலில் இருந்து மட்டுமல்ல, எகிப்திலிருந்தும் வழங்கப்படவேண்டும். மேலும் தண்ணீர் கொடுக்கப்படவேண்டும்.

இஸ்ரேல் - ஹமாஸ் சண்டை ஒரு பிரச்சினை. ஆனால், இந்தப் போராட்டத்தில் சாதாரண பலஸ்தீன மக்கள் பலியாகிவிடக் கூடாது. எனவே, அதனைத் தீர்க்க எகிப்து உள்ளிட்ட அரபு நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. மற்ற நாடுகளும் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளன. காஸாவில் அமைதியை ஏற்படுத்தும் அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கை ஆதரிக்கும் - என்றார்.

(அ-ம-213)

## 'ஸ்மார்ட்'...

வலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமூக ஊடகங்களின் புரட்சியாலேயே முன்னைய ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் விரட்டியடிக்கப்பட்டனர். ஆயுதம் ஏந்தாமல் 'ஸ்மார்ட்' போன் ஊடாகவே இளைஞர்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினர். இதற்கு அஞ்சியே தற்போதைய அரசு சமூகவலைத்தளங்களைக் கட்டுப்படுத்துவதற்கு - மௌனிக்க வைப்பதற்கு - முயற்சிக்கின்றது.

போலித்தகவல்கள் பரவுவதைத் தடுத்தல், வன்முறையைத் தூண்டுதல் போன்றவற்றைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் முதலில் புரிந்துணர்வுக்கு வரலாம். அதனை விடுத்து சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசு தன்னிச்சையாக கொண்டு வந்த இந்த நிகழ்நிலை காப்புச் சட்டவரைவை நாம் எதிர்ப்போம் - என்றார். (அ-ச-44)

## காற்றழுத்தத்தால்...

மேற்கு வளைகுடாப் பகுதியில் பயணிக்கும் நெடுநாள் மீன்பிடிப் படகுகள் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மத்திய - மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வுநிலை காற்றழுத்தத் தாழ்வுமண்டலமாக உருவாகி, அடுத்த 24 மணி நேரத்தில் மேலும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகி வங்கதேச கடற்கரையை (இலங்கையை விட்டு) நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அந்தக் கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40 - 45 கிலோமீற்றர் வேகத்தில் வீசுவதுடன், அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 - 60 கிலோமீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும். மேற்கூறிய கடல்கள் கொந்தளிப்பாகவோ அல்லது மிகவும் கொந்தளிப்பாகவோ இருக்கும், மேலும் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இதேவேளை - மத்திய, சப்ரகமுவ, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பரவலாக இடியுடன் கூடிய மழையுடன் பலத்த மின்னலுக்கான அதிக சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. அத்துடன், நாட்டின் பல பகுதிகளில் மாலை மற்றும் இரவுவேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான சாதகமான வளிமண்டல நிலை காணப்படுகின்றது - என்றுள்ளது. (அ-ம)

## 120 லீற்...

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் 37 வயதுடையவர். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## விபத்தில்...

கதிரவேலு லட்சுமணன் (வயது-47) என்பவரே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளும் பாரவூர்தியும் மோதுண்டு விபத்துக்குள்ளானதிலேயே மோட்டார்சைக்கிளில் பயணித்த லட்சுமணன் உயிரிழந்தார். அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாரவூர்தியின் சாரதி தப்பிச்சென்றுள்ள நிலையில், அவரைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம-113)

## புலிகளின்...

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் அனுமதியுடன் கடந்த 20ஆம் திகதி முதல் அகழ்வுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. 17 அடியைத் தாண்டி அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும் எந்தத் தடயப் பொருள்களும் மீட்கப்படாத நிலையில், அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன.

(அ-ம-27-113)

## அனைவருக்கும்...

தேசிய மீலாதுன் நபி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மன்னார் மாவட்டத்துக்கு இந்த அபிவிருத்தி தேவை. இந்தப் பகுதி போரால் பாதிக்கப்பட்ட பகுதி. எனவே, இந்தப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றோம். குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் வீதிகள் அமைப்பது தொடர்பிலும், இந்தப் பிரதேசத்தில் வீடுகளை நிர்மாணிப்பது தொடர்பிலும் தொடர்ந்து கவனம் செலுத்தப்படுகின்றது. மன்னாரில் கல்வியும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். மன்னார் நகரில் கல்வி நன்றாக உள்ளது. ஆனால் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள கல்வி நிலையால் திருப்தியடைய முடியாது.

மன்னாரில் பரந்துபட்ட அபிவிருத்திகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றன. இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையில் கடல் போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்துவதற்கான பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவுடனான கடல் போக்குவரத்து காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இதன் தொடர்ச்சியாகவும் அடுத்தகட்டமாகவும் தலைமன்னாரிலிருந்து கப்பல் போக்குவரத்துப் பணிகள் ஆரம்பிக்கப்படும். அதேநேரம் இந்தியாவும் இலங்கையும் இணைந்து மின்சாரக் கட்டமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளன. அது மன்னார் ஊடாகவே நடைபெறவுள்ளது.

இது வெறும் ஆரம்பம்தான். எதிர்காலத்தில் மன்னார் அபிவிருத்தி அடையும். குறிப்பாக இந்தப் பகுதியில் பசுமைப் பொருளாதாரம் மற்றும் பசுமை ஆற்றலுக்கு அதிக சாத்தியம் உள்ளது. இங்கு கிடைக்கும் சூரிய சக்தியைக் கொண்டு இந்தப் பகுதியை மேம்படுத்தமுடியும். புத்தளத்திலிருந்து மன்னார் வரை யாழ். குடாநாட்டின் ஊடாக முல்லைத்தீவு வரை அந்த வாய்ப்புள்ளது. மேலும் மன்னாரைச் சுற்றுலாமையமாக மாற்ற நாங்கள் விரும்புகிறோம். அதேநேரம் மீன்பிடித் தொழில் வளர்ச்சி அடையும் போது மன்னாருக்கு புதிய பொருளாதாரம் கிடைக்கும் - என்றார்.

(அ-ம-213)

## அரச...

செலவுத் திட்டம் அடுத்த மாதம் முன்வைக்கப்படவுள்ளது. அதன் உள்ளடக்கம் தொடர்பில் தெரியாது. எனினும், சம்பள உயர்வு இருக்கும் என எதிர்பார்க்கின்றேன். பாதீடு முன்வைக்கப்படும் வரை அதுபற்றி உறுதியாகக் கூறமுடியாது. இது தொடர்பில் நிதி அமைச்சருக்குத்தான் தெரியும். அதேவேளை, புதிய அதிபர்களுக்கான நியமனம் எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. சுமார் 4 ஆயிரத்து 715 அதிபர்கள் புதிதாக நியமனம் பெறவுள்ளனர் - என்றார். (அ-ம-44)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **24 பரப்புக் காணி** விற்பனைக்கு உண்டு.

* **நிலப்பரப்பு**
* 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300000/=)
* A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரம்
* களஞ்சியம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்ற இடம்
* தரகர் தேவையில்லை.
* பார்வையிடும் நேரம் காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்பு:- 077 6234 204**
**076 7558 606**
**077 0760 389**

(CS 26663) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டு. கண்ணலிங்கேஸ்வரரில் வன்னிவாழை வெட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள் மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங் கேஸ்வரர் ஆலயத்தில் நவராத்திரி பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. நாளை செவ்வாய்க்கிழமை விஜயதசமி தினத்தன்று முற்பகல் 11.30 மணிக்கு கும் பபூசை ஆரம்பமாகி, பிற்பகல் 2.30 மணிக்கு கண்ணகி அம்மன் சங்கரத்தை இலுப்பையடி வைரவர் கோவிலை நோக்கி எழுந்தருளுவார். அங்கு மாலை 4மணிக்கு வன்னி வாழை வெட்டு இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ச)


PACKING வேலை - கோண்டாவில்

நிறுவனம் ஒன்றின் கோண்டாவில் தாவடி கிளையில் BOTTLE லேபலின்ங். பக்கிங். செய்வதற்கு ஆண்/பெண் ஊழியர்கள் தேவை.
தேநீர், மதிய உணவுடன் நாள் சம்பளம் 1500 /=
பகல், இரவு வேலையும் உண்டு.
மாலை 5 PM - 1 AM வரை இரவு வேலை.
சம்பளம் 1500 /= (பகல் + இரவு 3000 சம்பளம்)

தொடர்பு : 0777608528, 0753953437

அவுஸ்திரேலியாவில் பட்டப்படிப்பு, வேலை வாய்ப்பு மற்றும் குடியேற்றம்.

நாங்கள் பின்வரும் துறைகளுக்கான வழிகாட்டுதல்களை இலவசமாக வழங்கி வருகின்றோம்

- மாணவர் விசா
- அனைத்து துறைசார்ந்த திறன்மிக்க பட்டியல் இடப்பட்ட தொழில் வல்லுனர்களுக்கான விசா ஆலோசனை

Reliance International Migration Services நிறுவனத்தினரால் அவுஸ்ரேலியாவில் விசா பெறுவதற்கான செயலமர்வு கூட்டம் இலவசமாக நடைபெறவுள்ளது

Hotel North Gate
யாழ்ப்பாணம்
திகதி: 31.10.2023 மாலை 3.30 - 5.30 வரை

பதிவு செய்யப்பட்ட குடியகல்வு ஆலோசகர்
THILINIKA WIJESINGHE
(MARA : 1463863 MIA : 8531)
Reliance International Migration Services
Level 10.14 Mason Street, Dandenong, VIC 3977, Australia
No 351 / 1 R A De Mel Mawatha, Colombo - 03.

அக்டோபர் 30ஆம் திகதிக்கு முன் உங்கள் திறன் தொடர்பான தகுதியைக் கண்டறிவதற்கு சுயவிபரகோவையை அனுப்புங்கள்
colombo@rimigrations.com
076 767 8281

11 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
அமெரிக்க லொத்தர் இலவச வீசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2024ல் நீங்களும் அமெரிக்காவில்
V2 Travels
0768226244
0768226241

# அகரம்
## உயர்நிலைக் கல்லூரி
## AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

## அறிவித்தல்

**2024ஆம்ஆண்டு தரம் 06 இல் கால்பதிக்கவுள்ள மாணாக்கரின் பெற்றோர்களிற்கு,**

* தங்கள் பிள்ளைகள் ஆரம்பக் கல்வியை நிறைவுசெய்து இடைநிலை வகுப்பிற்கு ஏற்றமடைகின்றார்கள்.
எனவே அவர்களது ஆரம்பம் சிறப்பாக அமைய வேண்டும். எனவேதான் அகரம் விஜயதசமி நாளை தங்கள் பிள்ளைகளின் இடைநிலைக்கல்வியின் ஆரம்ப நாளாக கொள்கின்றது.
எல்லாக்காலங்களிலும் இவ்வாறு அமைவதில்லை இம்முறை தங்கள் பிள்ளைகளிற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. எனவேதான் இந் நன்னாளில் வகுப்பினை ஆரம்பிக்கின்றோம்.
* அன்றையநாளில்10.30 இற்கு ஆரம்பிப்பதாகவே அறிவித்திருந்தோம். அது பல பிள்ளைகளிற்கு பொருத்தமான நேரமாக அமையவில்லை. எனவே அந் நாள்வகுப்பினை காலை 06-07 மணிவரை மாற்றியுள்ளோம். ஆகையால் இச் சுபநேரத்தில் தங்கள் பிள்ளைகளை நாள் வகுப்பினில் கலந்து கொள்ளச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### விசேட குறிப்பு


* பாடசாலைகளில் தரம் 06 வகுப்புக்கள் 2024/02 ஆம் மாதத்தில் இருந்தே ஆரம்பிக்கவுள்ளது.
ஆனாலும் நாம் முந்தி ஆரம்பிப்பது பொருத்தமான மாணவர்களைத் தெரிவுசெய்வதற்காகவே.
* பாடசாலையில் தரம் 06 வகுப்புக்களிற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கும் காலம் வரையும் எமது நிலையம் அனுமதிக் கட்டணத்தினைத் தவிர மாதக்கட்டணங்கள் எதுவும் அறவிடமாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.
* குறிப்பாக ஆங்கிலமொழி மூலத்தில் தங்கள் பிள்ளைகளை படிப்பிக்கவுள்ள பெற்றோர் இந்தவாய்ப்பினை மிகச் சரியாக பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
* ஏன்? எதற்காக என்றகேள்விகள் உங்களிற்கு எழும் அதற்கான விடைகள் பெற்றோர்சந்திப்பில் இயக்குநரால் அறியத்தரப்படும்.
* நாள்வகுப்பு நேரம் இடராகவே இருக்கும் ஆனாலும் நல்விடையங்களிற்காக சிரமங்களையும் சிரமமின்றி கடந்துவாருங்கள்.

அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்.
நன்றி

(cs 26698 M-1)


# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 10 . 1935



மறைவு 22 . 10 . 2023

## சீனியர் கந்தையா (உத்தரம்)

மயிலிட்டி வடக்கு மயிலிட்டி 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொட்டன் சிமா வைரவர் கோயிலடி கணேஸ்வரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சீனியர் கந்தையா (உத்தரம்) அவர்கள் நேற்று (22.10.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் சிவகாமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற பரமயோதி சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சண்முகரத்தினம் சறோஜினி, சந்திரபவன், சந்திர சிறி, சசிகலா (இந்தியா), சந்திரகுமார், சந்திரகாந்தன் (சிங்கப்பூர்), சந்திரமோகன் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலசோதி, பரமேஸ்வரன், லதாங்கி, சுகன்ஜா, நிசாந்தினி, செல்வரஞ்சன், வாசுகி, தர்சினி ஆகியோரின் அன்பு மாம னாரும், காலஞ்சென்ற நடராசா சதாசிவம் ராசா, அப்புத்துரை, சிவகுரு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கனகரத்தினம், சுப்பிரமணியம், கனகேஸ்வரி, பரமேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், வேல்முருகன், சக்திவேல் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பவன் (மலேசியா), பவானி, பகீரதி, தர்சன், தனுர்ஷனா, தக்ஷிகன் சிந்துஜன், டேனுஜன், பிரியங்கா, நேசகி, கிருசன், அகல்யா, வர்ணன், மதுசன், துவாரகன், ஆதிசன், அதிசயா, பிரணவி, ஆருதி, ஆகியோரின் பாசமிகு பேரனும் அபினவ்வின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2023) திங்கட்கிழமை பிற் பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்

(CS 26693 ) (K-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 10 . 1949



மறைவு 21 . 10 . 2023

## சுப்பையா தர்மலிங்கம் (காந்தி)

(இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மற்றும் சித்தி விநாயகர் ஆலய முன்னாள் தலைவர்

ஆனையிறவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருவையாறு மற்றும் இரத்தினபுரத்தை வசிப்பிடமாக வும் கொண்ட சுப்பையா தர்மலிங்கம் (காந்தி) நேற்றுமுன்தினம் (21.10.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பாக்கியம் தம்பதியரின மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், துஷ்யந்தினி (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தந்தையும், அனுகரன் (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு மாமனாரும், டியூசன், தனுசிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, மகேஸ்வரி மற்றும் பகவதி (வவுனியா), அன்னம்மா (வவுனியா), கதிர்காமநாதன் (திருவையாறு), தனலட்சுமி (திருவையாறு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, செல்வரட்ணம், பொன்னம்பலம், நாகலிங்கம், பொன்மணி மற்றும் குலசிங்கம் (திருவையாறு) ஆகியோரின் மைத்துனரும், பத்மாவதி (கனடா), இராமலிங்கம் (ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர், பளை), கமலாம்பிகை (பளை), அரியதேவி (கனடா), பாலசுந்தரம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர், பளை), விமலாதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான அழகரட்ணம், கந்தசாமி, பத்மநாதன் மற்றும் பரமசாமி (கனடா), ராகினி (ஓய்வுபெற்ற கிராம அலுவலர், பளை), பவளராணி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.10.2023 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி - 077 374 4076
மருமகன் - + 336 952 8882

(cr.40823) (N.1)

செய்தி : 021 483 0000 - விளம்பரம் : 021-493 1111 ... விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... உள்ள அவர்களது பணிமனையில் 23.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org